# ஈரானில் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 6 பேரை விடுவிக்க சட்ட நடவடிக்கை: பிரதமருக்கு எடப்பாடி பழனிசாமி கடிதம்

**சென்னை, அக்.6**

**ஈரான் நாட்டில் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 6 பேரை விடுவிக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமரை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.**

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து 5 மீனவர்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து ஒரு மீனவரும் மீன்பிடி தொழிலுக்காக அரபு நாட்டுக்கு சென்றிருந்தனர்.

அங்கு துபாய் மீன்பிடி தளத்தில் இருந்து சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த அவர்களை ஈரான் நாட்டு கடலோர காவல் படையினர் கடந்த 1.9.2018 அன்று கைது செய்துள்ளனர்.

ஈரான் நாட்டு கடல் எல்லை விதிகளை மீறியதாக அவர்கள் மீது குற்றச்சாட்டு கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் அங்குள்ள கிஷ் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்த 6 மீனவர்களும் மீன்பிடி படகிலேயே கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வருகின்றன.

மேலும், மீனவர்களுக்கு அடிப்படை தேவையான பொருட்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாக தெரிகிறது. அடிப்படை வசதி இல்லாமல் அவர்கள் அவதியுற்று வருகின்றனர். மேலும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் சிலரது விசா இன்னும் சில மாதங்களில் காலாவதியாக உள்ளது.

வாழ்வாதாரத்தை தேடி வெளிநாட்டுக்கு சென்று, நீண்ட காலமாக கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ள அந்த ஏழை மீனவர்களின் குடும்பத்தினர் இங்கு மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். மீனவர்களின் பாதுகாப்பு குறித்து அவர்களது குடும்பத்தினர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

இதேநிலை தொடர்ந்தால், இந்தியாவில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர்களின் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுவிடும். எனவே, நீங்கள் இந்த விஷயத்தில் தனிக்கவனம் செலுத்தி, டெக்ரானில் உள்ள இந்திய தூதருக்கு அறிவுறுத்தி அந்த மீனவர்களுக்கு அடிப்படை தேவைகளை உடனே வழங்க வேண்டும் என்றும், அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வத்தை, கழக அமைப்புச் செயலாளரும், கழக செய்தித் தொடர்பாளருமான எஸ். கோகுல இந்திரா தனது பிறந்த நாளையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை, திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவர் அணிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ். ராகேஷ் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது, கழக மாணவர் அணிச் செயலாளர் எஸ்.ஆர். விஜயகுமார் எம்.பி., உள்ளிட்ட மாணவர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## குமரியிலிருந்து மீன்பிடிக்க சென்ற 800 மீனவர்கள் கரை திரும்பினர்

**கன்னியாகுமரி, அக். 6–**

**கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, கடலில் மீன்பிடிக்கச் சென்ற 800 க்கும் அதிகமான மீனவர்கள் கரை திரும்பியுள்ளனர்.**

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், நாளை தமிழகம், கேரளா ஆகிய மாநிலங்களுக்கு ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளது. அதே சமயம் புயல் காரணமாக கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால், மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கரை திரும்ப வேண்டும் என வலியுறுத்தப்பட்டு இருந்தது. அதற்கான ஏற்பாடுகளும் நடைப்பெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்தின் முட்டம், குளச்சல், தேங்காய்பட்டணம் ஆகிய மீன்பிடி துறைமுகங்களிலிருந்து 411 விசைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க கடலுக்கு சென்றிருந்தனர். அவற்றில் 215 படகுகளில் 800 க்கும் மேற்பட்ட மீனவர்கள் கரை திரும்பியுள்ளனர். இந்நிலையில், மேலும், 176 படகுகளில் உள்ள மீனவர்களுக்கு தகவல் அனுபப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் கேரளா, கர்நாடகா, குஜராத், கோவா ஆகிய இடங்களை தங்குதளமாக கொண்டு 235 படகுகள் சென்றதில் 100 படகுகள் கரை திரும்பியுள்ளனர். 66 படகுகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விரைவில் அதில் உள்ள மீனவர்கள் வீடு திரும்புவார்கள் எனவும், 89 படகுகள்உக்கு தகவல் சேராததால் அவர்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் கப்பலில் உள்ள சேட்டிலைட் போன் மூலம் தகவல் அளிக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு பல்கலைக்கழகத்தில் கவர்னர் பன்வாரிலால் புரோகித் 9–ந்தேதி பட்டங்களை வழங்குகிறார்

**சென்னை, அக்.6**

**தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா வருகிற 9ந்தேதி நடக்கிறது. விழாவில் 3,284 பேர் பட்டம் பெறுகிறார்கள் என்று துணைவேந்தர் பேராசிரியை ஷீலா ஸ்டீபன் தெரிவித்தார்.**

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியை ஷீலா ஸ்டீபன் நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னையில் உள்ள உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் 11வது பட்டமளிப்பு விழா 9ந் தேதி காலை 11 மணிக்கு பல்கலைக்கழக உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறுகிறது. கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை தாங்கி 3,284 பேருக்கு பட்டம் வழங்குகிறார். பட்டம் பெறுபவர்களில் 134 பேர் நேரடியாக பட்டம் பெறுகிறார்கள். 3,150 பேர் விழாவுக்கு வராமல் பட்டம் பெற்றதாக கவர்னர் ஒப்புதல் வழங்குகிறார். அதனால் அவர்கள் அனைவருக்கும் விழா முடிந்த பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

பட்டம் பெறும் 134 பேர்களில் ஆர்.சூர்யா, எஸ்.வித்யா சங்கரி, விக்டோரியா ஷோபனா உள்பட 14 மாணவ–மாணவிகள் அதிக மதிப்பெண் பெற்றவர்கள். மேலும் 42 பேர் ஆராய்ச்சி (பிஎச்.டி) பட்டமும், 78 பேர் எம்.பில் பட்டமும் பெறுகிறார்கள்.

விழாவில் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பி.பாலகிருஷ்ண ரெட்டி சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

மத்திய பிரதேசத்தில் உள்ள லட்சுமி பாய் உடற்கல்வியியல் நிறுவன துணைவேந்தர் பேராசிரியர் திலீப்குமார் துரைஹா பட்டமளிப்பு விழா உரையாற்றுகிறார்.

மாணவர்–மாணவிகள் விடுதிக்காக தமிழக அரசு ரூ.4 கோடியே 74 லட்சத்தை அனுமதித்துள்ளது. இ–நூலகத்திற்கு (கம்ப்யூட்டர் மூலம் கற்றல்) ரூ.2 கோடியே 15 லட்சமும் அனுமதி வழங்கி உள்ளது. பல்கலைக்கழகத்திற்கு படிக்க வரும் மாணவர்கள் எந்த பிரிவில் திறமை இருக்கிறதோ அதை கண்டுபிடித்து அவர்கள் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டு போட்டிக்கு தயார் படுத்தப்படுகிறார்கள். அதற்காக அரசு ரூ.1 கோடியே 20 லட்சத்தை வழங்கி உள்ளது. மேலும் சிலம்பம் மற்றும் களரி விளையாட்டுக்கு அரசு ரூ.1 கோடியே 60 லட்சம் அனுமதித்துள்ளது.

மத்திய அரசு செயற்கை இழையில் விளையாட்டு ஓடு தளம் அமைக்க ரூ.7 கோடி வழங்கி உள்ளது. பேட்மின்டன் கட்டிடம் மற்றும் டேபிள் டென்னிஸ் அரங்கத்துடன் கட்டிடம் கட்ட ரூ.20 கோடி தமிழக அரசு அனுமதித்துள்ளது.

இவ்வாறு ஷீலா ஸ்டீபன் கூறினார்.

பேட்டியின் போது பதிவாளர் பேராசிரியர் டி.ராதாகிருஷ்ணன், தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி பேராசிரியர் சி.ஆறுமுகம் ஆகியோர் உடன் இருந்தனர்.

## பிரதமரை சந்திக்க முதல்வர் எடப்பாடி 8–ந் தேதி டெல்லி செல்கிறார்

### எய்ம்ஸ் மருத்துவமனை விரைவில் அமைக்க வலியுறுத்துகிறார்

**சென்னை, அக்.6**

**பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வரும் 8ந் தேதி (திங்கட்கிழமை) டெல்லி செல்கிறார்.**

பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க அனுமதி கேட்டு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கடந்த மாதம் (செப்டம்பர்) 30ந் தேதி பிரதமர் அலுவலகத்தில் கடிதம் அளிக்கப்பட்டது. இந்த நிலையில், வரும் 8ந் தேதி பிரதமரை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. இந்தத் தகவலை சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் நேற்று உறுதிப்படுத்தினார்.

8ந் தேதி டெல்லி செல்லும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியுடன் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் மற்றும் உயர் அதிகாரிகள் செல்ல இருக்கின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சந்திக்கும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டங்கள் குறித்து கோரிக்கை மனு அளிப்பார் என்று தெரிகிறது.

குறிப்பாக, மதுரை தோப்பூரில் அமைய இருக்கும் எய்ம்ஸ் மருத்துவமனையில் மத்திய மந்திரி சபையின் ஒப்புதலை விரைவாக வழங்குமாறு கோரிக்கை விடுப்பார் என தெரிகிறது.

## மதுரை தோப்பூரில் விரைவில் எய்ம்ஸ் மருத்துவமனை

### அமைச்சர் விஜயபாஸ்கர் உறுதி

**சென்னை, அக்.6–**

**மதுரை தோப்பூரில் விரைவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும் என்று அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் கூறினார்.**

சென்னை தலைமைச் செயலக மக்கள் நல்வாழ்வுத்துறை கூட்டரங்கில் மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது தொடர்பாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கரின் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

அப்போது அமைச்சர் சி. விஜயபாஸ்கர் தெரிவித்ததாவது:

புரட்சித் தலைவி அம்மா கண்ட கனவான தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதை நனவாக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தியதன் பேரில் மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்தது.

இது தொடர்பாக கடந்த 30.9.2018 அன்று ஊடகங்களில் வந்த செய்தியினைத் தொடர்ந்து, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணனால் எய்ம்ஸ் தொடர்பாக விவரம் கோரப்பட்டது. இது தொடர்பான பி.எம்.எஸ்.எஸ்.ஒய். (PMSSY) திட்டத்தின் இயக்குநர் டாக்டர் சஞ்சய் ராயிடமிருந்து ஒரு விளக்கமான மின்னஞ்சல் பெறப்பட்டுள்ளது.

இம்மின்னஞ்சலில் பி.எம்.எஸ்.எஸ்.ஒய். திட்டத்தின் கீழ் தமிழகத்தில் அமைக்கப்படவுள்ள எய்ம்ஸ் மருத்துவமனை குறித்து, கடந்த செப்டம்பர் மாதம் 30ம் தேதி வந்த செய்தியானது தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் வழங்கப்பட்டிருந்த தகவல் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக உறுதிபட தெரிவித்துள்ளார்.

ஆயத்த பணிக்கு

ரூ.15 கோடி அனுமதி

மேலும் மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கு நிலத்தின் தன்மை மற்றும் மண் பரிசோதனை போன்ற ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள ரூ.15 கோடி மதிப்பில் மத்திய அரசால் ஹைட்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள 200 ஏக்கர் நிலம் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறைக்கே சொந்தமானதாகும்.

மேலும், மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க தோராயமாக ரூ.1,264 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதி குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். மேலும் வரும் 9–ம் தேதி மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டாவை நானும் முதன்மைச் செயலாளரும் புதுடெல்லியில் சந்தித்து இப்பணிகளை விரைவுபடுத்தவுள்ளோம்.

மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைவது உறுதி. இதில் தாமதமோ, சுணக்கமோ, தடையோ இல்லை. மேலும், எய்ம்ஸ் மருத்துவமனை மதுரையில் திட்டமிட்டப்படி விரைவில் அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.


NOTICE

SUNDARAM MUTUAL

RECORD DATE FOR DIVIDEND

**NOTICE** is hereby given that Sundaram Trustee Company Limited, the Trustee to Sundaram Mutual Fund, has declared dividend on the face value of ₹ 10/- under the following scheme:

| Scheme Name | Plan - Option | Record Date# | Dividend Declared* (₹ per unit) | NAV per unit as on October 5, 2018 (₹) |
|---|---|---|---|---|
| Sundaram Large & Mid Cap Fund (formerly Sundaram Equity Multiplier) | Regular Plan-Dividend | October 11, 2018 | 0.50 | 17.3522 |
| | Direct Plan-Dividend | | 0.50 | 18.2937 |

# Or subsequent business day if the specified date is a non-business day.
* Subject to deduction of applicable dividend distribution tax.

**Pursuant to the payment of dividend, the NAV of the scheme will fall to the extent of payout and statutory levy, if applicable.** The above dividend will be subject to the availability of distributable surplus in the respective plans / options of the scheme on Record Date. Past performance may or may not be sustained in future. All unitholders under the Dividend Option of the above mentioned scheme, whose name appears on the Register of Unitholders on the aforesaid Record Date, will be entitled to receive the dividend. The above stated quantum of dividend and the Record Date were approved by the Board of Directors of Sundaram Trustee Company Limited vide their resolution dated October 05, 2018.

For **Sundaram Asset Management Company Ltd**
**P Sundararajan**
Secretary & Compliance Officer

Place: Chennai
Date: October 06, 2018

For more information please contact:
**Sundaram Asset Management Company Ltd**
(Investment Manager to Sundaram Mutual Fund)
CIN: U93090TN1996PLC034615

**Corporate Office:** 1st & 2nd Floor, Sundaram Towers, 46, Whites Road, Royapettah, Chennai-14.
Contact No. (India) 1860 425 7237, (NRI) +91 44 2831 0301
Fax: +91 44 2841 8108. www.sundarammutual.com
**Regd. Office:** No. 21, Patullos Road, Chennai 600 002.

**Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.**



EIH **அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
வெப்சைட்: www.eihassociatedhotels.in
போன்: 91-44-22344747, பேக்ஸ்: 91-44-22346699

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47னபடி, இதர அலுவல்களுக்கு இடையே 30 செப்டம்பர், 2018ல் முடிந்த காலாண்டு/ அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, 31 அக்டோபர் 2018 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

5 அக்டோபர் 2018



**IN THE COURT OF X ASSISTANT CITY CIVIL JUDGE AT CHENNAI**
**EP.No. 938 OF 2018**
**IN**
**REF NO: NPA-ARB-SL:5202 OF 2010**

M/S. MAHINDRA & MAHINDRA FINANCIAL SERVICES LIMITED
…DECREE HOLDER
-VS-
1. MURUGAN
OLD NO.23 NEW NO.66, MOSQUE GARDEN
2nd STREET ARUNACHALAM ROAD, SALIGRAMAM
CHENNAI 600 093.
2. PREMA
OLD NO.23 NEW NO.66, MOSQUE GARDEN
2nd STREET ARUNACHALAM ROAD, SALIGRAMAM
CHENNAI 600 093.
…JUDGEMENT DEBTORS

Please take notice that when the above Execution Petition No. 938 OF 2018 came up for hearing on 14/08/2018 before the Hon'ble X Assistant City Civil Court at Chennai, the Hon'ble Judge was pleased to order notice to you returnable by 31/10/2018 Please take notice that if you do not appear on 31/10/2018 the matter will be heard and decided in your absence.

S. NAMASIVAYAM
COUNSEL FOR DECREE HOLDER



DHFL

**திவான் ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
தேசிய அலுவலகம்: டிஎச்எப்எல் ஹவுஸ், 4வது தளம், 19 சஹார் ரோடு, ஆப் வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, வில்லே பார்லே (கிழக்கு), மும்பை–400 099
கிளை அலுவலகம்: டிஎச்எப்எல், ட்ரீம்ஸ் மால், முதல் தளம், எல்.பி.எஸ். மார்க், பண்டப் (மேற்கு) மும்பை–400 078.

**டிமாண்ட் நோட்டீஸ்**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன் கீழ். திவான் ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் (டிஎச்எப்எல்) கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13 (12) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ், கீழ்க்கண்ட கடன்தாரர்களை ''மேற்சொன்ன கடன்தாரர்கள்'' அவர்களுக்கு அளிக்கப்பட்ட டிமாண்ட் நோட்டீசிலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அவை பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் அறிவிப்பது யாதெனில் மேற்சொன்ன கடன்தாரர்களால் ஏதேனும் அளிக்கப்பட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள்/எழுத்துபூர்வமாக ஆணைப்படி மேற்சொன்ன அறிவிப்பில் விவரமாக அளிக்கப்பட்டுள்ள தொகை மற்றும் கீழ்க்குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து பணத்தை திரும்ப செலுத்து நாள் வரையிலான மேலும் வட்டி ஆகியவற்றை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் டிஎச்எப்எல்–லிற்கு செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் மீண்டும் அறிவிக்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆஸ்திகளை மேற்சொன்ன கடன்தாரர் டிஎச்எப்எல் வசம் அடைமானம் வைத்துள்ளார்.

| கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) பெயர்/கடன் குறியீடு | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை | சொத்து முகவரி |
|---|---|---|
| (LC No. 00007209 நவி மும்பை கிளை) நிதின் பாபு சமத் (கடன்தாரர்) சமதி R (உடன் கடன்தாரர்) | 28.08.2018, ரூ.1757217/- (ரூபாய் பதினேழு லட்சத்து ஐம்பத்தியேழாயிரத்து இருநூற்று பதினேழு மட்டும்) (என்பிஏ தேதி: 01.06.2018) | மனை எண். 53/வடக்கு பகுதி + 52/தெற்கு பகுதி, ராம்ராஜ் நகர், எல்லை நகர் விநாயகர் கோவில், ஈரோடு மாவட்டம், புதூர் கிராமம், ஈரோடு 638 115, தமிழ்நாடு |
| (LC No. 00000028 கெங்கேரி கிளை) பிரியதர்ஷினி ஸ்ரீதர் (கடன்தாரர்) பாரதி சரவணன் (உடன் கடன்தாரர்) | 28.08.2018, ரூ.2446163/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து நூற்று அறுபத்து மூன்று மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | மனை எண். 54, காளஹஸ்திபுரம் கிராமம், கிரீன் வேலி மெட்ரிக் பள்ளி அருகில் மற்றும் ஓகூர், தர்மபுரி 635 109, தமிழ்நாடு |
| (LC No. 00000029 கெங்கேரி கிளை) பிரியதர்ஷினி ஸ்ரீதர் (கடன்தாரர்) பாரதி சரவணன் (உடன் கடன்தாரர்) | 28.08.2018, ரூ.2206397/- (ரூபாய் இருபத்திரெண்டு லட்சத்து ஆறாயிரத்து முன்னூற்று தொன்னூற்றியேழு மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | மனை எண். 91ஏ, கிரீன் வேலி மெட்ரிக் பள்ளி, ஓகூர், காளஹஸ்திபுரம் கிராமம், ஓகூர், தர்மபுரி 635 109, தமிழ்நாடு |
| (LC No. 00000577 சென்னை கிளை) வெங்கடேசன் M (கடன்தாரர்) S. M. மோகன் பாபு டெல்டா (உத்தரவாததாரர்) | 23.08.2018, ரூ.262131/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி ரெண்டாயிரத்து நூற்று முப்பத்தொன்று மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2014) | பெத்திகுப்பம் (கேட்) கிராமம், தேர்வழி அஞ்சல், கும்மிடிப்பூண்டி, சென்னை 601 201 தமிழ்நாடு |
| (LC No. 00004145 சென்னை கிளை) வினோத்குமார் சங்கர் (கடன்தாரர்) திவ்யா ஜெயராமன் (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.1655606/- (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பத்தைந் தாயிரத்து அறுநூற்று ஆறு மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | மனை எண். 437, 'விங் ஹௌன் கார்டன்ஸ்' காரணை கிராமம், தாளம்பூர் பஞ்சாயத்து காரணை, சென்னை 603 103, தமிழ்நாடு |
| (LC No. 00006869 மதுரை கிளை) நடராஜன் P (கடன்தாரர்) சாந்தி N (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.781838/- (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்தோராயிரத்து எண்ணூற்று முப்பத்தியெட்டு மட்டும்) (என்பிஏ தேதி: 01.05.2018) | கதவு எண்.50/1 சர்வே எண். 271/1, சொக்கநாத புரம், சின்னமனூர் நகராட்சி, சின்னமனூர் 625 515, தமிழ்நாடு |
| (LC No. 00008921 மதுரை கிளை) ஜான் பால் S (கடன்தாரர்) கிரேசி புஷ்பம் J (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.635433/- (ரூபாய் ஆறு லட்சத்து முப்பத்தைந் தாயிரத்து நானூற்று முப்பத்து மூன்று மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | ஆர் எஸ் எண்.220/5 பகுதி, கதவு எண்.9, பர்மா அகதிகள் காலனி, 3வது தெரு மண்மலை மேடு, கே புதூர், மதுரை மாநகராட்சி, மதுரை 625 007 தமிழ்நாடு |
| (LC No. 00000225 சேலம் கிளை) முருகேசன் M (கடன்தாரர்) திரு. C. சண்முகம் உதவி (உத்தரவாததாரர்) | 23.08.2018, ரூ.564069/- (ரூபாய் ஐந்து லட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுபத்தொன்பது மட்டும்) (என்பிஏ தேதி: 01.06.2009) | சர்வே எண்.359/25ஏ, நயினார்பாளையம், சிறுபாக்கம் சார் பதிவு அலுவலகம், விருத்தாச்சலம் பதிவு மாவட்டம், அரியலூர் தமிழ்நாடு |
| (LC No. 00000656 சேலம் கிளை) அஞ்சலை A (கடன்தாரர்) திரு. K. இளங்கோவன். த/பெ. K (உத்தரவாததாரர்) | 23.08.2018, ரூ.152545/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூற்று நாற்பத்தைந்து மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | எஸ்.எப். எண்.542/5, சின்ன சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் 606 201 தமிழ்நாடு |
| (LC No. 00001320 சேலம் கிளை) மாணிக்கம் P (கடன்தாரர்) அமுதா M (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.296489/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூற்றாறாயிரத்து நானூற்று எண்பத் தொன்பது மட்டும்) (என்பிஏ தேதி: 01.05.2018) | வி.என். எண்.96/21ஏ 96/20, வரசூர் கிராமம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை 606 753, தமிழ்நாடு |
| (LC No. 00001938 சேலம் கிளை) பழனியப்பன் R (கடன்தாரர்) சகுந்தலா P (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.387308/- (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்தியேழாயிரத்து முன்னூற்று எட்டு மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | எஸ்.எப். எண்.160/1ஏ1, வார்டு எண்.5, அரூர் அஞ்சல், தர்மபுரி 636 905 தமிழ்நாடு |
| (LC No. 00002488 சேலம் கிளை) பழனியப்பன் R (கடன்தாரர்) சகுந்தலா P (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.151238/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தியெட்டு மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | எஸ்.எப். எண்.160/1ஏ1, கதவு எண்.5/254-6, பெரியார் நகர், அரூர், தர்மபுரி 636 905 தமிழ்நாடு |
| (LC No. 00004015 சேலம் கிளை) பழனியப்பன் R (கடன்தாரர்) சகுந்தலா P (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.549815/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்தொன்ப தாயிரத்து எண்ணூற்று பதினைந்து மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | எஸ்.எப். எண்.160/141, பெரியார் நகர், ஓகூர், கதவு எண்.5/254-6, அரசு பெண்கள் பள்ளி பின்புறம், ஓகூர், தர்மபுரி 636 904, தமிழ்நாடு |
| (LC No. 00004139 சேலம் கிளை) உமா R (கடன்தாரர்) இளந்திரையன் M (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.699231/- (ரூபாய் ஆறு லட்சத்து தொன்னூற்றி யொன்பதாயிரத்து இருநூற்று முப்பத்தொன்று மட்டும்) (என்பிஏ தேதி: 01.07.2018) | சர்வே எண்.438/9, வார்டு 15, கதவு எண்.15/160, அரிஜன காலனி, அம்பேத்கர் நகர், அரூர், தர்மபுரி 636 903, தமிழ்நாடு |
| (LC No. 00000343 புதுச்சேரி கிளை) S அக்னேஸ் கரேந்தர் (கடன்தாரர்) S பிரதீப் (உடன் கடன்தாரர்) | 23.08.2018, ரூ.2242882/- (ரூபாய் இருபத்திரெண்டு லட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்திரெண்டு மட்டும்) (என்பிஏ தேதி: 01.06.2010) | எண்.32/10, பெரிய வன்னிய தெரு, சிதம்பரம், கடலூர், 608 001, தமிழ்நாடு |

மேற்கண்ட கடன்தாரர்கள் டிஎச்எப்எல்–க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், டிஎச்எப்எல் மேற்கண்ட ஈடு செய்யப்பட்ட ஆஸ்திகள் மீது மேற்கண்ட சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகள் பிரிவு 13(4)–ன் கீழ் நடவடிக்கையை மேற்கொள்ளும். அதற்கான முழு பொறுப்பு மற்றும் கட்டணங்கள் மற்றும் விளைவுகள் மேற்கண்ட கடன்தாரர்களையே சாரும். மேற்கண்ட கடன்தாரர்கள் டிஎச்எப்எல்—ன் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி மேற்கண்ட அசையா சொத்துக்களை வேறு ஒருவருக்கு மாற்றவோ, விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ தடைசெய்யப்பட்டுள்ளது. ம